# நெல்லிக்குப்பம் நகராட்சி
## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2018–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24–ம் தேதி திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் அவசரக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்.B.E
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றபொருள் .1.. (a)** நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அவர்களின் நவம்பர் **– 2018** மாதத்திய நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

(b) நெல்லிக்குப்பம் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் கூடுதல் பொறுப்பு அவர்களின் நவம்பர் **– 2018** மாதத்திய நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம் .

கோப்பு எண் . 3792/2018/இ1

**தீர்மான எண் : 299 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் . 2 .** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர்.அம்பேத்கார் பேருந்து நிலைய கடைகளுக்கு கடை எண்.8க்கு மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி 20.12.2018 இன்று கோரப்பட்டதில், கீழ்கண்ட நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி எழுப்பியதை மன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பொது ஏலம் கோரியவரின் பெயர் மற்றும் முகவரி | உயர்த்தப்பட்ட மறு ஏல பொது ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | திரு.கலிபுல்லா த/பெ முஹம்மது அன்சாரி<br>முஸ்லீம் கருமாரத் தெரு,<br>நெல்லிக்குப்பம். | ரூ.1,325/– |
| 2 | திரு.முஹம்மது சாலி த/பெ முஹமது சுல்தான்<br>ரஹமத் நகர், சுல்தான் பேட்டை,<br>நெல்லிக்குப்பம். | ரூ.1,350/– |

அலுவலக குறிப்பு : வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள ஏலதாரர் கடை எண். 8க்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்ட தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.468/2006/அ1

**தீர்மான எண் : 300. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் . 3.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் 20 ,21, 22.11.2018 அன்று “கனமழை” முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நகராட்சி எல்லைக்குட்பட்ட மூன்று நிவாரண மையங்களில் மின் வசதி இல்லாததால் மூன்று மையங்களிலும் ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் வாடகைக்கு எடுத்து நிறுத்தி வைத்திருந்ததிற்கு ஸ்ரீ ஜெயராம் சவுண்டு சர்வீஸ் , 268/561 , மெயின் ரோடு , நெல்லிக்குப்பம் அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ . 6600/– வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு , பதிவிற்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு . மன்றம் பதிவு செய்யலாம் .

( ந.க.எண். 4943/2018/இ1)

**தீர்மான எண் : 301 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள் . 4.</u>** 8 வது மாநில உயர்மட்ட குழு கூட்டத்தில் (19.12.2018) (SBM) இந்நகராட்சிக்கு உலர் கழிவு பொருட்கள் சேகரிப்பு மையம் (Material Resource Recovery Centre ) அமைக்க ரூ.18.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது . மேலும் 13 எண்ணிக்கை பேட்டரி ஆப்ரேட்டர் வண்டி ரூ.23.40 இலட்சத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது . நகராட்சியின் வருவாய் நிதியில் 13 எண்ணிக்கை BOV வாகனம் வாங்குவதற்கு ஏற்கனவே நடவடிக்கை மேற்கொண்டதையும் , அதனை இந்த நிதியில் ஈடு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு:. -1. ரூபாய் 18.00 இலட்சம் மிதிப்பீட்டில் உலர் திடக்கழிவு சேமிப்பு கிடங்கு அமைத்திட நிர்வாக அனுமதி வழங்கலாம் .

2. நகராட்சி பொது நிதியில் ரூபாய் . 23.40 இலட்சம் மதிப்பீட்டில் 13 எண்ணிக்கை BOV வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதையும், செலவினத்தை இந்த நிதியில் ஈடு செய்து கொள்ளவும் அனுமதிக்கலாம் .

**ந.க.எண் . 0044/2019/இ1)**

**<u>தீர்மான எண் : 302. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள் .5.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான துப்புரவு பணியாளர் குடியிருப்பில் இயங்கி வந்த மின் மோட்டார் காயில் பழுதாகி திரும்ப பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது . இதனால் 24 குடியிருப்பில் தண்ணீர் இல்லாமல் சிரமப்படுகின்றனர் . எனவே அவசர அவசியம் கருதி மின் மோட்டார் புதியதாக வாங்கி பொருத்த தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.20000/—க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் பணியை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு .S. பரிமளா மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு:. மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 4949/2018/இ1)**

**<u>தீர்மான எண் : 303. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள் .6.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016—17ஆம் ஆண்டின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை— 5 அவர்களின் திருத்திய மதிப்பீடு செயல்முறை ஆணை . ந.க.எண். 30362/2016/ப்பி3 நாள். 22..11.2018 ன் படி 14.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் . 30 சரவணபுரம் கரும்பு ஏற்றி செல்லும் சாலையில் 2 TPD கொள்ளவுடன் சுற்று சுவருடன் கூடிய MINI Micro Composting Centre அமைத்தல் பணி | 32.25 | திரு.இராஜசேகர் கடலூர் | **4.69 %** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| | | | M/s. ஜெய் & கோ கடலூர் | **6.68%** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : —</u> ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதத்தை குறைத்து தர கோரி கடிதம் அனுப்பட்டதில் திரு. இராஜசேகர் கடலூார். அவர்கள் 2.90% மதிப்பீட்டை விட கூடுதல் விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் அளித்துள்ளார். கட்டுமான பொருட்களின் உள்ளுர் விலை விகிதம் மற்றும் திட்டப்பணியின் அவசர அவசியம்

கருதி இவருடைய ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம். கூடுதல் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் .

(ந.க.எண். 2023 /2016/இ1).

**<u>தீர்மான எண் : 304. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள் .7.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016–17ஆம் ஆண்டின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை– 5 அவர்களின் திருத்திய மதிப்பீடு செயல்முறை ஆணை . ந.க.எண். 30362/2016/ப்பி3 நாள். 22..11.2018 ன் படி 14.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | மேல்பாதி உரக்கிடங்கில் சுற்று சுவர் அமைக்கும் பணி | 30.00 | திரு.இராஜசேகர் கடலூர் | **4.83 %** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| | | | M/s. ஜெய் & கோ கடலூர் | **6.56%** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு :–</u> ஒப்பந்தப்புள்ளிகளில் விலை விகிதத்தை குறைத்து தர கோரி கடிதம் அனுப்பட்டதில் திரு. இராஜசேகர் கடலூர். அவர்கள் 2.90% மதிப்பீட்டை விட கூடுதல் விலை விகிதத்தில் செய்து தர சம்மதம் அளித்துள்ளார். கட்டுமான பொருட்களின் உள்ளூர் விலை விகிதம் மற்றும் திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி இவருடைய ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம். கூடுதல் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் .

(ந.க.எண். 2023 /2016/இ1).

**<u>தீர்மான எண் : 305. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .</u>**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி